# பறவைகளின் அரசன்.




பறவைகளின் அரசனாய் முடிசூடியவரே - எம்மை,

பிறவிப்பெருங்கடல் கடக்கச்செய்வீரே !

பறவைகளின்.......

சங்கபாலனை தலையில் கிரீடமாக தரித்து ,

அங்கமெல்லாம் பாம்புகளால் சூழபெற்றவுன் ;

தங்கநிற மேனியும் விஷத்தினால் கருத்து - இன்று ,

எங்களைக் காத்திட வந்திட்டவைநதேயனே !

பறவைகளின்............

நாதியற்ற உன்பக்தர்களைக் காப்பதற்கே,

ஓடிவந்தே அருளும் பரமனின்வாகனமே ;

ஆதிசேஷனை கங்கணமாய் அணிந்தவரே - நானும் ,

ஓதிமகிழ்வேன் உன்தன் நாமமதை நாளுமே !

பறவைகளின்.........